Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 192 | உள்ளூர் - 11.07.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 192 | வெளியூர் - 12.07.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**வீட்டு வாஸ்து... தொழில் வெற்றி!** | **மதுரை சுகாதார சங்கம்: 51 வேலைவாய்ப்புகள்!** | **போயஸ் கார்டனில் முதல்வர் விஜய்?** | **சென்னை, மதுரைக்கு வெப்ப அலை எச்சரிக்கை!**

## ஈரானுக்கு அதிரடி எச்சரிக்கை விடுத்த டிரம்ப்!



வாஷிங்டன், ஜூலை. 11–

டிரம்ப் ஈரானுக்கு அதிரடி எச்சரிக்கையை விடுத்து உள்ளார். அவர் கூறும்போது, என்னை படுகொலை செய்யவோ அல்லது அதற்கான முயற்சியில் ஈடுபடவோ ஈரான் அரசு முயன்றால், அந்நாட்டை தாக்க 1,000 ஏவுகணைகள் தயார் நிலையில் உள்ளன.

அதைத் தொடர்ந்து உடனடியாக மேலும் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் ஏவப்படும். படுகொலை அல்லது படுகொலை முயற்சி நடந்தால் ஈரானுக்கு எதிராகப் பதிலடி கொடுக்குமாறு ராணுவத்திற்கு ஏற்கனவே உத்தரவிட்டு உள்ளேன். ஈரானின் அனைத்துப் பகுதிகளையும் முழுமையாகச் சிதைத்து அழிக்க அமெரிக்க ராணுவம் தயாராகவும், விருப்பத்துடனும், திறனுடனும் உள்ளது. ஈரான் எங்களிடம் பேச்சுவார்த்தைகளை தொடருமாறு கேட்டுள்ளது. நாங்களும் அதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம். ஆனால், போர் நிறுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை அவர்களுக்கு தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்து விட்டோம்.

அதேவேளையில் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொள்ளும் என்று டிரம்ப் தெரிவித்தார். இதற்கிடையே அமெரிக்காவும் ஈரானும் அடுத்த வாரம் சுவிட்சர்லாந்தில் அணுசக்தி தொடர்பான புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்த வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

## இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் ஜூலை 17 முதல்!




புதுடெல்லி, ஜூலை. 11–

ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் ரயிலை வரும் ஜூலை 17–ந் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.

இந்த ரயிலுக்கான சோதனை ஓட்டம் வெற்றி பெற்ற நிலையில், 81 கி.மீ. நீளம் உள்ள ஹரியானாவின் ஜிந்த் சோனிபத் வழித்தடத்தில் மணிக்கு 75 கி.மீ முதற்கட்டமாக இயக்கப்பட உள்ளது. இந்த ரயிலில் டிக்கெட் விலை ரூ5 முதல் ரூ25 வரைஇருக்கும்எனதகவல்வெளியாகியுள்ளது,

## இந்தியா, நியூசிலாந்து இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க ‘வியூகக் கூட்டாண்மை’ ஒப்பந்தம்!



புதுடெல்லி, ஜூலை. 11–

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இருதரப்பு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு ‘வியூகக் கூட்டாண்மை’ என்ற அடுத்த கட்டத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் நியூசிலாந்திற்கு மேற்கொண்டுள்ள முதல் பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**2030–க்கான வரைபடம்:**

இரு நாட்டு உறவுகளையும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வழிநடத்த இந்த விரிவான வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, இருதரப்பு வர்த்தகத்தை 2030–ஆம் ஆண்டிற்குள் ‘7 பில்லியன்’ நியூசிலாந்து டாலராக ($35,000 கோடி ரூபாய்) இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்:**

சமீபத்தில் கையெழுத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டுவர இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் மூலம் நியூசிலாந்தின் 95% ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரிகள் குறைக்கப்படும், அதில் 57% உடனடி வரிவிலக்குப் பெறும். அதேபோல் இந்தியாவின் 100% ஏற்றுமதிப் பொருட்களுக்கு நியூசிலாந்து வரிவிலக்கு அளிக்கிறது.

**பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு:**

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்ட, இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே பரஸ்பர தளவாட ஆதரவு ஒப்பந்தம் மற்றும் புதிய கடல்சார் பாதுகாப்பு உரையாடல் தொடங்கப்படவுள்ளன.

**18 முக்கிய முடிவுகள்:**


வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு மட்டுமின்றி சுற்றுலா, விளையாட்டு, கல்வி, பேரிடர் மேலாண்மை, பால்வளத் துறை மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 18 முக்கிய கூட்டு அறிவிப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இதுகுறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூறுகையில், “இந்தியா மற்றும் நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளும் ஜனநாயக விழுமியங்களைக் கொண்ட கடல்சார் நாடுகள். நாம் ‘ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள்’ என்பதைப் போல இந்த சந்திப்பு அமைந்துள்ளது.

நமது நெருங்கிய ஒத்துழைப்பு இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமைதியையும் புதிய ஆற்றலையும் உருவாக்கும்.”

இதனைத்தொடர்ந்து, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன், “பிரதமர் மோடியின் இந்த வரலாற்றுப் பயணம் இரு நாட்டு உறவில் ஒரு முக்கிய மைல்கல். சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நியூசிலாந்து வணிகங்களுக்கு இந்தியாவின் 140 கோடி மக்கள் தொகைக் கொண்ட சந்தையில் புதிய கதவுகளைத் திறக்கும்.” என்றார்.

இதனைத் தொடர்ந்து ஆக்லாந்தில் உள்ள ஸ்பார்க் அரேனாவில் நியூசிலாந்து வாழ் இந்திய மக்கள் பங்கேற்ற பிரமாண்ட வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த வரலாற்றுச் சந்திப்பு இரு நாடுகளின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது.



தமிழ்நாடு அரசின் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, எழும்பூர் ரெயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அவரது சிலைக்கு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் ராஜீவ், ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் விஜய் தாமு, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை/தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் தட்சிணாமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அருண் தம்புராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 2029–ல் ஒரே நாடு... ஒரே தேர்தல்!

# மத்திய அரசு தீவிர நடவடிக்கை

# அனைத்து கட்சிகளுடனும் ஆலோசனை வேகம்

## ஜேபிசி தலைவர் அறிவிப்பு!!




புதுடெல்லி, ஜூலை. 11–

மத்திய அரசின் முக்கிய தேர்தல் சீர்திருத்தத் திட்டமான ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ (One Nation, One Election) திட்டத்தை 2029 மக்களவைத் தேர்தலின்போது அமல்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்று நாடாளுமன்ற கூட்டுக் குழு (JPC) தலைவர் பி.பி. சவுத்ரி தெரிவித்துள்ளார். கோவாவில் நடைபெற்ற கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இந்தத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2019–ஆம் ஆண்டு முன்மொழிந்தார். பின்னர் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலை குழு விரிவான ஆய்வு நடத்தி, 2024–ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதனைத் தொடர்ந்து அரசியல் சாசனத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

கட்சிகளிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.பி. சவுத்ரி கூறினார். குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, பஞ்சாப், ஹரியானா, டெல்லி உள்ளிட்ட பல மாநிலங்களில் முதல்வர்கள், சட்ட நிபுணர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரின் கருத்துகளும் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தனித்தனியாக தேர்தல்கள் நடத்தப்படுவதால் நாட்டுக்கு சுமார் ரூ.7 லட்சம் கோடி அளவுக்கு பொருளாதார இழப்புஏற்படுவதாகவும், தேர்தல் நடத்தை விதிகளால் வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், அரசு பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து தேர்தல் பணியில் ஈடுபடுவதால் கல்விச் செயல்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன என்றார். இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாக ஒரே நேரத்தில் மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களை நடத்தும் திட்டத்தை 2029–க்குள் நடைமுறைப்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாளில் எனது மரியாதையையும், வீரவணக்கத்தையும் செலுத்துகிறேன்: முதல்-அமைச்சர் விஜய்!





சென்னை, ஜூலை. 11–

சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாளில் எனது மரியாதையையும் வீர வணக்கத்தையும் செலுத்துகிறேன் என்று தமிழக முதல்–அமைச்சர் விஜய் தனது எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதல்–அமைச்சர் ச.ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக விடுதலைக் குரல் எழுப்பிய சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் அழகுமுத்துகோன் பிறந்த நாளில் எனது மரியாதையையும் வீர வணக்கத்தையும் செலுத்துகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகிலுள்ள கட்டாலங்குளத்தில் பிறந்த மாவீரன் அழகுமுத்துகோன், தமிழக மண்ணின் வீரத்திற்கும், தன்மான உணர்விற்கும், சுதந்திர வேட்கைக்கும் அடையாளமாக விளங்கியதோடு, அடிமை வாழ்வைவிட சுதந்திரமே உயர்ந்தது என்பதைத் தனது சொல்லாலும் செயலாலும் உணர்த்தி, தாய்நாட்டிற்காகத் தனது உயிரையே அர்ப்பணித்தவர்.

அவரது ஒப்பற்ற வீரமும், தன்னலமற்ற தியாகமும், அசைக்க முடியாத தேசப்பற்றும் தமிழினத்தின் பெருமையாக என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## எடப்பாடி பழனிசாமி 15-ந்தேதி முதல் மீண்டும் ஆலோசனை...!

சென்னை, ஜூலை. 11–

வருகிற 15–ந்தேதி முதல் 3 நாட்கள் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி மீண்டும் ஆலோசனை நடத்துகிறார். அன்று காலை 10 மணிக்கு ஈரோடு புறநகர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட நிர்வாகிகளுடனும், 11.30 மணிக்கு திருவள்ளூர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட நிர்வாகிகளுடனும் ஆலோசனை நடத்தும் அவர், மாலையில் தேனி கிழக்கு, மேற்கு மாவட்ட அ.தி.மு.க.வினருடன் கலந்துரையாடுகிறார்.

மறுநாள் 16–ந்தேதி காலை 10 மணிக்கு புதுக்கோட்டை வடக்கு, தெற்கு, கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. 11.30 மணிக்கு கடலூர் கிழக்கு, வடக்கு மாவட்ட நிர்வாகிகளுடனும் மாலை 4.30 மணிக்கு கடலூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகளுடனும் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்துகிறார். 18–ந்தேதி காலை 10 மணிக்கு கரூர் மாவட்ட நிர்வாகிகளுடனும், 11.30 மணிக்கு நீலகிரி மாவட்ட நிர்வாகிகளுடனும், அன்று மாலை 4.30 மணிக்கு விருதுநகர் கிழக்கு, மேற்கு மாவட்ட நிர்வாகிகளும் எடப்பாடி பழனிசாமி நடத்தும் ஆலோசனையில் பங்கேற்கிறார்கள்.

இது தொடர்பாக அ.தி.மு.க. தலைமை கழகம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்தும், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டங்களில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்கள், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எடப்பாடி பழனிசாமி நடத்தி வரும் இந்த தொடர் ஆலோசனைக் கூட்டங்களை எம்.எல்.ஏ.க்கள் பலர் புறக்கணித்துள்ளனர். ஏற்கனவே அ.தி.மு.க.வில் இருந்து 6 எம்.எல்.ஏ.க்கள் விலகி த.வெ.க.வில் சேர்ந்து உள்ள நிலையில் இந்த புறக்கணிப்பு மீண்டும் அக்கட்சியில் புகைச்சலை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி மீண்டும் நடத்தும் ஆலோசனை கூட்டங்களில் கட்சி நிர்வாகிகள் பங்கேற்பார்களா? என்ற கேள்வியும் எழுந்து உள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 11.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 27-ம் தேதி

## ஈரானுடன் டிரம்ப் ஏன் தொடர்ந்து மோதலை அதிகரித்தார்?



1.அணு ஆயுத திட்டத்தை தடுக்க

ஈரான் அணு ஆயுதம் உருவாக்கக் கூடாது என்பது டிரம்ப் நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாக கூறப்பட்டது. அதற்காக அணு வசதிகள் மற்றும் தொடர்புடைய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

2.ஏவுகணை திறனை பலவீனப்படுத்த

ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணை களஞ்சியங்களையும், ராணுவ திறனையும் குறைப்பதே மற்றொரு முக்கிய காரணமாக விளக்கப்பட்டது.

3.அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளின் பாதுகாப்பு

மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு ஈரானால் அச்சுறுத்தல் இருப்பதாக அமெரிக்கா கூறி, முன்கூட்டியே நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தது.

4.ஹோர்முஸ் நீரிணை பாதுகாப்பு

உலகின் முக்கிய எண்ணெய் போக்குவரத்து பாதையான ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்தை பாதுகாப்பதே தாக்குதல்களின் ஒரு காரணமாக கூறப்பட்டது.

5.ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்த

ஹெஸ்புல்லா, ஹூதி உள்ளிட்ட ஈரான் ஆதரவு அமைப்புகளுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்த வைக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது.

6.அரசியல் மற்றும் வெளிநாட்டு கொள்கை காரணங்கள்

டிரம்ப் நிர்வாகம் "அமெரிக்க தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல்" மற்றும் "பிராந்திய நிலைத்தன்மையை மீட்டெடுத்தல்" என்ற காரணங்களையும் முன்வைத்தது.

இந்த காரணங்களை டிரம்ப் நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்திருந்தாலும், சில, இந்த நடவடிக்கைகளுக்கான காரணங்கள் காலப்போக்கில் மாறுபட்டு விளக்கப்பட்டதாகவும், சில முக்கிய கூற்றுகளுக்கு போதுமான ஆதாரங்கள் பொதுவெளியில் வெளியிடப்படவில்லை.

## போலிசான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்த 3 ஆயிரம் ஆசிரியர்கள் பணி நீக்கம்!



பாட்னா, ஜூலை. 11–

பீகார் கல்வி மந்திரி மிதிலேஷ் திவாரி செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

பீகாரில் 2006 முதல் 2015–ம் ஆண்டு வரை நடந்த ஆசிரியர் பணி நியமனங்களில் பெரும் முறைகேடு நடந்திருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. போலி பட்டங்கள் மற்றும் கல்வி சான்றிதழ்களை வழங்கி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆசிரியர் பணி நியமனம் பெற்று உள்ளனர். இந்த ஆசிரியர்களை பணி நீக்கம் செய்ய மாநில அரசு முடிவு செய்துள்ளது.

பணி நீக்கம் செய்யப்பட்ட பின், அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மத்தியிலும், மாநிலத்திலும் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசுகள், ஊழலை சகித்துக்கொள்ளாது. அதேநேரம் இந்த விவகாரத்தில் முந்தைய நிதிஷ்குமார் அரசு விசாரணைக்கு உத்தரவிட்டதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறு கூறினார்.

இதற்கிடையே போலி சான்றிதழ்கள் கொடுத்து பணி நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. மேலும் அவர்கள் இதுவரை பெற்ற சம்பளத்தை வட்டியுடன் திரும்ப வசூலிக்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளதாக கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் முறைகேடு வெளிச்சத்துக்கு வந்ததை தொடர்ந்து சில ஆசிரியர்கள் பணியில் இருந்து விலகி உள்ளனர். ஆனால் அவர்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். பீகார் கல்வித்துறையில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் போலி சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் கொடுத்து பணியில் சேர்ந்திருக்கும் விவகாரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## சபரிமலையில் விடுதி அறைகளை ஆன்லைனில் முன்பதிவு செய்யலாம்!

திருவனந்தபுரம், ஜூலை. 11–

சபரிமலையில் விடுதி அறைகளை ஆன்லைனில் முன்பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் ஜெயக்குமார் திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:– சபரிமலையில் அனைத்து செயல்பாடுகளும் டிஜிட்டல் மயமாக்கப்படும். சபரிமலையில் விடுதி அறைகள் அனைத்தும் ஆன்லைன் முறைப்படி பக்தர்கள் முன்பதிவு செய்ய வசதி செய்யப்படும். தற்போது வரை 190 அறைகள் மட்டுமே முன்பதிவு செய்யப்பட்டு வந்தது. மேலும் கூடுதல் அறைகள் தயார் படுத்தப்படும். இனிமேல் அய்யப்ப சங்கமம் நடத்தப்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியன் வங்கியின் நிகர லாபம் ரூ.3,273 கோடியாக உயர்வு!

சென்னை, ஜூலை. 11–

இந்தியன் வங்கியின் நிகர லாபம் ரூ.3,273 கோடியாக உயர்ந்துள்ளது என்று அதன் நிர்வாக இயக்குனர் பினோத் குமார் தெரிவித்துள்ளார்.




2026–27–ம் நிதி ஆண்டின் இந்தியன் வங்கியின் முதலாம் காலாண்டு நிதி நிலை அறிக்கையை அதன் நிர்வாக இயக்குனரும், தலைமை செயல் அதிகாரியுமான பினோத் குமார் நிருபர்கள் முன்னிலையில் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:–

இந்தியன் வங்கியின் நிகர லாபம் கடந்த நிதி ஆண்டில் (ஜூன்) ரூ.2,973 கோடியாக இருந்தது. தற்போது நிகர லாபம் ரூ.3,273 கோடியாக உயர்ந்து இருக்கிறது. கடந்த நிதி ஆண்டுடன் ஒப்பீடுகையில் 10.09 சதவீதம் அதிகரித்து உள்ளது. வங்கியின் செயல்திறன். நிலையான வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் நிகர லாபம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

வங்கியின் செயல்பாட்டு லாபம் ரூ.4,770 கோடியில் இருந்து ரூ.5.557 கோடியாகவும் நிகர வட்டி வருவாய் ரூ.6,359 கோடியில் இருந்து ரூ.7,435 கோடியாகவும் உயர்ந்துள்ளது. வங்கியின் பரவலான முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் மொத்த வணிகம் 13.66 சதவீதம் அதிகரித்துள்ளது.

மொத்த வைப்புத்தொகை (டெபாசிட்) ரூ.7 லட்சத்து 44 ஆயிரத்து 289 கோடியில் இருந்து ரூ.8 லட்சத்து 44 ஆயிரத்து 578 கோடி என்ற அளவை எட்டி இருக்கிறது. மொத்தம் ரூ.2 லட்சத்து 36 ஆயிரத்து 720 கோடி வரை முன்னுரிமை கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஐ.ஐ.பி.எப். அமைப்பு விருது வழங்கி கவுரவித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## இந்திய எல்லைக்கு அருகே சீனா கட்டும் அணையால் நிலநடுக்க அபாயம்!

பெய்ஜிங், ஜூலை. 11–

திபெத்தில் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே சீனா அமைத்து வரும் உலகின் மிகப்பெரிய மெடோக் நீர்மின் திட்டம், ஆபத்தான நிலநடுக்க மண்டலத்தில் இருப்பதாக அந்நாட்டு புவியியலாளர்கள் எச்சரித்துள்ளனர். இந்தியாவின் அருணாச்சல பிரதேச எல்லையிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் அமையும் இந்த அணை, 60 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறனுடன் 2033–ஆம் ஆண்டுக்குள் செயல்பாட்டுக்கு வரும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



பைசென் புவிப்பிளவு கோடு அணைப் பகுதிக்கு அருகே இருப்பதால், நிலநடுக்கம் மற்றும் நிலச்சரிவு அபாயம் அதிகம் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அணையில் நீர் தேக்கப்படும்போது பாறைகள் பலவீனமடைந்து கட்டுமானத்தின் நிலைத்தன்மை பாதிக்கப்படலாம் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இந்த அணை மூலம் பிரம்மபுத்திரா நதியின் நீரோட்டத்தை சீனா கட்டுப்படுத்தும் என்ற கவலையை இந்தியாவும் வங்கதேசமும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன.

மேலும், இயற்கை பேரிடரால் அணைக்கு சேதம் ஏற்பட்டால் அசாம் மற்றும் வங்கதேசத்தில் கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இத்திட்டத்தின் ஆபத்துகள் குறித்து கடந்த ஆண்டு மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் மற்றும் வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஆகியோர் ஏற்கனவே சீன அதிகாரிகளிடம் இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## எம்.சாண்ட் ஏற்றுமதிக்கு தற்காலிக தடை!

சென்னை, ஜூலை. 11–

எம் சாண்ட் உள்ளிட்ட கனிமங்கள் வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்வதை தடை விதிக்க தற்காலிகமாக தடை விதிக்க சுரங்கம் மற்றும் புவியியல் துறை இயக்குனருக்கு அதிகாரம் வழங்கி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.




எம்.சாண்டை வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்வதை ஒழுங்குபடுத்தவும் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் போதுமான அளவில் எம்.சாண்ட் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கட்டுக்கடங்காத விலை உயர்வை கட்டுப்படுத்தவும், கட்டுமான தொழில் முடக்கத்தை தடுத்து நிறுத்தவும் தமிழக அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்து வந்தன. இந்நிலையில், கேரளா, கர்நாடகாவுக்கு கனிமங்களை கொண்டு செல்வதை தடுத்து, தமிழ்நாட்டில் போதுமான அளவில் கனிமங்கள் கிடைப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## உலக மக்கள் தொகை தினம் 2026: 830 கோடியைத் தொட்டது உலக மக்கள் தொகை-வளர்ச்சியைத் தீர்மானிக்கும் 8 நாடுகள்!

புதுடெல்லி, ஜூலை.11–

உலகெங்கும் வாழும் மக்களின் உரிமைகள், சுகாதாரம், பாலின சமத்துவம் மற்றும் நிலையான வளர்ச்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் 'ஜூலை 11' அன்று World Population Day உலகளவில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.




2026 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை சுமார் '830 கோடியை' கடந்து தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், உலக மக்கள் தொகைப் பெருக்கத்தின் திசையைத் தீர்மானிக்கும் 8 முக்கிய நாடுகள் எவை என்ற விவாதம் தற்போது முன்னெழுந்துள்ளது.

**வரலாற்றுப் பின்னணி:**

கடந்த 1987 ஆம் ஆண்டு ஜூலை 11 அன்று உலக மக்கள் தொகை 500 கோடியைத் தொட்டது. இந்த மைல்கல் உலக நாடுகளிடையே பெரும் விழிப்புணர்வையும் பொதுமக்களிடையே மிகுந்த ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

இந்த வரலாற்று முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது '1989' ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் ஆளும் குழு இந்தத் தினத்தை ஆண்டுதோறும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நிரந்தர நாளாக அறிவித்தது. அதன்படி, 1990 ஜூலை 11 முதல் உலக மக்கள் தொகை தினம் அதிகாரப்பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) சமீபத்திய மக்கள் தொகை கணிப்புகளின்படி, தற்போதிலிருந்து வரும் 2050 ஆம் ஆண்டிற்குள் உலக மக்கள் தொகையில் ஏற்படப்போகும் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பாதிக்கும் மேற்பட்ட பங்களிப்பை வெறும் 8 நாடுகள் மட்டுமே வழங்கவுள்ளன. அதில்,

**1.இந்தியா:**

சீனாவுக்கு அடுத்தபடியாக இருந்த இந்தியா, தற்போது 147 கோடிக்கும் அதிகமான மக்களுடன் உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகத் தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பதோடு, உலக வளர்ச்சிக்கும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**2. நைஜீரியா:**

ஆப்பிரிக்கக் கண்டத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்த நாடு, விரைவில் அமெரிக்காவை முந்தி உலக மக்கள் தொகையில் 3–வது இடத்தைப் பிடிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

**3.பாகிஸ்தான்:**

ஆசிய பிராந்தியத்தில் மக்கள் தொகை பெருக்கம் அதிகமாக இருக்கும் மற்றொரு முக்கிய நாடு.

**4.காங்கோ ஜனநாயகக் குடியரசு:**

ஆப்பிரிக்காவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள இந்நாடு, வரும் தசாப்தங்களில் மக்கள் தொகையில் இரட்டிப்பு வளர்ச்சியைச் சந்திக்கும்.

**5.எத்தியோப்பியா:**

கிழக்கு ஆப்பிரிக்காவில் மிக வேகமான மக்கள் தொகை வளர்ச்சியைப் பதிவு செய்து வரும் நாடு.

**6.தான்சானியா:**

வளரும் ஆப்பிரிக்க நாடுகளின் பட்டியலில் உள்கட்டமைப்பு மற்றும் மக்கள் தொகையில் வேகமாக வளர்ந்து வருகிறது.

**7. பிலிப்பைன்ஸ்:**

தென்கிழக்கு ஆசியாவில் அதிக பிறப்பு விகிதம் மற்றும் மக்கள் தொகை அடர்த்தி கொண்ட தீவு நாடு.

**8.எகிப்து:**

வட ஆப்பிரிக்க மற்றும் அரபு நாடுகளில் மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடாக உருவெடுத்து வருகிறது. இந்த 8 நாடுகளில் 5 நாடுகள் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் வரும் காலங்களில் உலக மக்கள் தொகையின் மையப்புள்ளி ஆசியாவிலிருந்து ஆப்பிரிக்காவை நோக்கி நகர்வதை ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டுகிறது.

**நெருக்கடிகளும் எதிர்கால சவால்களும்:**

உலக மக்கள் தொகை 800 கோடியைக் கடந்திருப்பது மருத்துவத் துறையின் வளர்ச்சி மற்றும் மனித ஆயுட்காலம் அதிகரித்திருப்பதற்கான சான்றாக இருந்தாலும், இதனால் ஏற்படும் சவால்கள் அதிகம்.

குறிப்பாக, மேலே குறிப்பிட்டுள்ள 8 நாடுகளும் பெரும்பாலும் வளரும் அல்லது ஏழை நாடுகளாக இருப்பதால், அங்குள்ள மக்களுக்குத் தேவையான முறையான கல்வி, சுகாதார வசதிகள், குடிநீர், வேலைவாய்ப்பு மற்றும் பாலின சமத்துவத்தை உறுதி செய்வது அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.



## வீட்டு வாஸ்து... தொழில் வெற்றி!




வாஸ்து சாஸ்திர நம்பிக்கைகளின்படி, வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ தொழில் செய்யும் இடத்தில் சில திசைகளில் குறிப்பிட்ட பொருட்களை வைப்பது நல்ல ஆற்றல், செழிப்பு மற்றும் அமைதியை அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது. இவை அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டவை அல்ல; பாரம்பரிய வாஸ்து நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை.

**வாஸ்து சாஸ்திரப்படி ஒவ்வொரு மூலையிலும் வைக்கக்கூடிய பொருட்கள்**

வடகிழக்கு (ஈசானியம்)
தண்ணீர் நிரப்பிய கண்ணாடி பாத்திரம்
சிறிய நீரூற்று (Water Fountain)
துளசி அல்லது மூங்கில் செடி
தெய்வப் படம் அல்லது பூஜை இடம்
தென்கிழக்கு (அக்னி மூலை)
சிவப்பு நிற அலங்காரப் பொருள்
மின் விளக்கு அல்லது தீபம்
கணினி, பிரிண்டர் போன்ற மின்சாதனங்கள்
தென்மேற்கு (நைருதி)
இரும்புப் பெட்டி அல்லது பணப்பெட்டி
முக்கிய ஆவணங்கள்
கனமான அலமாரி
தொழில் உரிமையாளரின் இருக்கை
வடமேற்கு (வாயு மூலை)
வெள்ளை நிற பூச்செடி
காற்று மணி (Wind Chime)
வாடிக்கையாளர் அமரும் பகுதி
திசைப்படி கூடுதல் பரிந்துரைகள்
வடக்கு: பணப்பெட்டி, கணக்கு புத்தகங்கள்
கிழக்கு: சூரிய ஒளி நன்றாக வரும்படி திறந்த இடம்
மேற்கு: தயாரிப்புகள் அல்லது பொருட்கள் சேமிப்பு
தெற்கு: கனமான பொருட்கள், அலமாரி

**தொழில் வளர்ச்சிக்காக பலர் பின்பற்றும் வாஸ்து குறிப்புகள்**

நுழைவாயிலை சுத்தமாக வைத்திருங்கள்.

உடைந்த பொருட்கள், பழுதான கடிகாரம் போன்றவற்றை அகற்றுங்கள்.

தொழில் செய்யும் போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமருவது நல்லது என்று வாஸ்து கூறுகிறது.

பணப்பெட்டியை தென்மேற்கு பகுதியில் வைத்து, அதன் கதவு வடக்கு அல்லது கிழக்கு நோக்கி திறக்கும் வகையில் அமைக்கலாம்.

**குறிப்பு:** வாஸ்து சாஸ்திரம் ஒரு பாரம்பரிய நம்பிக்கை முறை. தொழில் வெற்றி பெற திட்டமிடல், தரமான சேவை, நிதி மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை போன்ற நடைமுறை காரணிகளே முக்கிய பங்கு வகிக்கின்றன.

## சென்னை, மதுரைக்கு வெப்ப அலை எச்சரிக்கை!



புதுடில்லி, ஜூலை. 11–

உலகளவில் கடும் வெப்ப அலை அபாயம் அதிகம் உள்ள நகரங்கள் குறித்த ஆக்ஸ்போர்டு பல்கலை ஆய்வில், தமிழகத்தின் சென்னை, மதுரை உள்ளிட்ட 14 நகரங்கள் முதல் 50 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் உலகம் வெப்பமடைந்து வரும் நிலையில், 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 205 நகரங்களில் வெப்ப அலை அபாயம் குறித்து ஐரோப்பிய நாடான பிரிட்டனைச் சேர்ந்த ஆக்ஸ்போர்டு பல்கலை ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வு, 'சஸ்டெயினபிள் சிட்டீஸ் அண்டு சொசைட்டி' என்ற அறிவியல் இதழில் வெளியாகியுள்ளது.

அதன் விபரம்:

மக்களின் வயது குறிப்பாக முதியோர், குழந்தைகள் அதிகம் இருப்பது, பொருளாதார நிலை, உடல்நல பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு, குளிரூட்டும் வசதிகள், மரங்களின் அடர்த்தி உள்ளிட்ட அம்சங்களும் ஒரு நகரின் வெப்ப அபாயத் தின் அளவை தீர்மானிக்கின்றன.

உலகளவில் வெப்ப அலையால் அதிக ஆபத்தில் உள்ள நகரமாக மேற்காசிய நாடான ஈராக்கின் அல் பஸ்ரா முதலிடத்திலும், குஜராத்தின் ஆமதாபாத் இரண்டாவது இடத்திலும் உள்ளன. மூன்றாவது இடத்தில் மேற்கு ஆப்ரிக்க நாடான மாலியின் பமாகோ உள்ளது. இந்த பட்டியலில், சென்னை, மதுரை உள்ளிட்ட 14 இந்திய நகரங்கள் முதல் 50 இடங்களை பிடித்துள்ளன. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மதுரை மணி
உள்ளூர் 11.07.26 வெளியூர் 12.07.26




# 30 வயதை கடந்த பெண்களே... இதை தவறவிடாதீர்கள்!



30 வயதைக் கடந்த பிறகு பெண்களின் எலும்பு ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். குடும்பத்தின் ஆரோக்கியத்தை கவனிக்கும் பல பெண்கள், தங்களின் உடல்நலனை புறக்கணிப்பதால் இளம் வயதிலேயே மூட்டுவலி, முதுகுவலி மற்றும் எலும்பு பலவீனம் போன்ற பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது.

30 வயதிற்குப் பிறகு பெண்களின் எலும்பு அடர்த்தி இயல்பாகவே குறையத் தொடங்குகிறது. குறிப்பாக மெனோபாஸ் காலத்தில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் அளவு குறைவதால், எலும்புகள் வேகமாக பலவீனமடையும் அபாயம் அதிகரிக்கிறது. ஆய்வுகளின்படி, மேற்கத்திய பெண்களை விட இந்தியப் பெண்களுக்கு எலும்பு அடர்த்தி குறைவாக இருப்பதால், ஆஸ்டியோபோரோசிஸ் (Osteoporosis) ஏற்படும் வாய்ப்பும் அதிகம்.

இதற்கு முக்கிய காரணங்களாக கால்சியம், புரதச்சத்து மற்றும் வைட்டமின் டி குறைபாடு, போதிய உடற்பயிற்சி இல்லாமை மற்றும் எலும்பு ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு இல்லாமை ஆகியவை கூறப்படுகின்றன.

**எலும்புகளை வலிமையாக வைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?**

தினமும் குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சி செய்யுங்கள்.

பால், தயிர், பன்னீர் போன்ற கால்சியம் நிறைந்த உணவுகளை சேர்த்துக்கொள்ளுங்கள்.

மீன், முட்டை, பருப்பு போன்ற புரதச்சத்து உணவுகளை தவறாமல் சாப்பிடுங்கள்.

காலை சூரிய ஒளியில் 1520 நிமிடங்கள் இருக்கவும்.


புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களை தவிர்க்கவும்.

கால்சியம் அல்லது வைட்டமின் டி மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையுடன் மட்டுமே எடுத்துக்கொள்ளுங்கள்.

முடிவாக, 30 வயதிலிருந்தே எலும்பு ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தினால், எதிர்காலத்தில் எலும்பு முறிவு, மூட்டுவலி மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற பிரச்சினைகளின் அபாயத்தை கணிசமாகக் குறைக்கலாம். ஆரோக்கியமான உணவு மற்றும் வாழ்க்கை முறையே வலிமையான எலும்புகளுக்கான சிறந்த முதலீடாகும்.



திருப்பூர் அதிமுக மாநகர் மாவட்ட கழகம், புதிய பேரூந்து நிலையம் பகுதி கழகம், வார்டு எண்கள் 16, 17, 17–A, 19 மற்றும் 19A உள்ள கழக நிர்வாகிகளை திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் திரு வேல்குமார் M சாமிநாதன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து உரையாற்றினார். உடன் பகுதி கழக செயலாளர் வானவில் கனகராஜ். வட்டக் கழக செயலாளர்கள் , செல்வராஜ், ரங்கசாமி ExMC, சோமசுந்தரம், ராமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



## சினிமா துளிகள்..!

# தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணியில் 'தமிழ் முருகன்'... புத்தகத்தை தழுவிய வரலாற்றுப் படம்!




தனுஷின் அடுத்த படமான 'தமிழ் முருகன்' திரைப்படத்தை வெற்றிமாறன் இயக்குகிறார். இந்த படத்தை Wunderbar Films மற்றும் Miles To Go Productions இணைந்து தயாரிக்கின்றன. இசையமைப்பாளர் சாய் அபயங்கர்.

**முக்கிய அம்சங்கள்:**

'தமிழ் முருகன்' என்ற தலைப்பில் படம் உருவாகிறது.

பாடலாசிரியர் அறிவுமதி எழுதிய 'தமிழ் முருகன்' புத்தகத்தை தழுவி படம் உருவாகும் என தகவல்.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் தமிழ் முருகனின் வரலாற்றுப் பின்னணியை மையமாகக் கொண்ட கதை.

படத்தின் First Look வெளியாகி ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குரூப்-2, 2A தேர்வர்கள் கவனம்!

புதுடெல்லி, ஜூலை. 11–

ஒருங்கிணைந்த குரூப்–2, குரூப்–2A தேர்வில் குறைந்த பட்ச தேர்ச்சி பெற்றும், விளையாட்டு வீரர் ஒதுக்கீடு கோரிய விண்ணப்பதாரர்கள், தங்களின் விளையாட்டு சான்றிதழ்களை ஜூலை 20 இரவு 11.59 மணிக்குள் டிஎன்பிஎஸ்சி இணையத எளத்தில் பதிவேற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




**முக்கிய அம்சங்கள்:**

பதிவேற்றம்: ஜூலை 11 முதல் 20 வரை.

OTR (One Time Registration) மூலம் ஆவணங்களை பதிவேற்ற வேண்டும்.

அசல் விளையாட்டு சான்றி தழ்களின் ஸ்கேன் நகல்கள் கட்டாயம்.

குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரர்க ளுக்கு தகவல் அனுப்பப்பட்டு ள்ளது. காலக்கெடுவுக்குள் பதிவேற்றத் தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என டிஎன்பிஎஸ்சி எச்சரித்துள்ளது.

# இந்தியாவில் 10 ஆண்டுகளில் 94,000 அரசுப் பள்ளிகள் மூடல் நிதி ஆயோக்!




புதுடெல்லி, ஜூலை. 11–

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சுமார் 94,000 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தினசரி அடிப்படையில் கிட்டத்தட்ட 25 அரசுப் பள்ளிகள் மூடப்படுவதற்குச் சமம் என்ற அதிர்ச்சித் தகவலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2014–15 ஆம் நிதியாண்டில் 11.07 லட்சமாக இருந்த அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை, 2024–25 இல் 10.13 லட்சமாகக் குறைந்துள்ளது. அதே வேளையில், இதே பத்தாண்டு காலகட்டத்தில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை 2.88 லட்சத்திலிருந்து 3.39 லட்சமாக கணிசமாக அதிகரித்துள்ளது.

# அரசு ஊழியர்களுக்கு குட் நியூஸ்!

சென்னை, ஜூலை. 11–

தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதி யதாரர்களின் நிலுவையில் உள்ள மருத்துவக் காப்பீட்டு தொகைகளை விரைந்து வழங்க மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு ள்ளது.




**முக்கிய அம்சங்கள்:**

NHIS 2021 (அரசு ஊழியர்கள்), NHIS 2022 (ஓய்வூதியதாரர்கள்) திட்டங்களின் நிலுவை கோரிக்கைகள் தீர்க்க நடவடிக்கை. மாவட்ட அளவிலான DLEC குழுக்கள் உடனடியாக கூட்டப்பட வேண்டும்.

நீதிமன்ற வழக்குகள் உட்பட அனைத்து நிலுவை காப்பீட்டு கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும்.

31.05.2026 வரை உள்ள கோரிக்கைகள் ஜூலை 31, 2026–க்குள் முடிக்க வேண்டும்.

30.06.2026 வரை உள்ள மற்ற கோரிக்கைகள் ஆகஸ்ட் 31, 2026–க்குள் தீர்க்கப்பட வேண்டும்.

காலக்கெடுவுக்கு பிறகு எந்த விண்ணப்பமும் நிலுவையில் வைக்கக் கூடாது என அரசு உத்தரவு.

இந்த உத்தரவு "மிகவும் அவசரம்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**பலன்:**

இதனால் நீண்ட நாட்களாக மருத்துவக் காப்பீட்டு தொகைக்காக காத்திருந்த ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் விரைவில் நிவாரணம் பெறுவார்கள்.

# மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு இடமாற்றம் தடை!




சென்னை, ஜூலை. 11–

2027 மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்களை ஆகஸ்ட் 30 வரை இடமாற்றம் செய்யக் கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.


**முக்கிய அம்சங்கள்:**

முதல் கட்ட கணக்கெடுப்பு: வீடுகள் பட்டியல், வீட்டு வசதி கணக்கெடுப்பு ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 30 வரை.

2–வது கட்டம்: மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027 பிப்ரவரி 1 முதல் மார்ச் 31 வரை.

கணக்கெடுப்புப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்ட அரசு ஊழியர்களுக்கு ஆகஸ்ட் 30 வரை இடமாற்றம் தடை.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தமிழக அரசு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.



# ஸ்டாலினை தொடர்ந்து உதயநிதியும் லண்டன் பயணம்!

சென்னை, ஜூலை. 11–

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை ச ல் லண்டன் சென்றதைத் தொடர்ந்து, உதயநிதி ஸ்டாலினும் ஜூலை 11 இல் காலை 10.05 மணிக்கு லண்டன் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம், உதயநிதியின் மகன் இன்பநிதி லண்டன் மான்செஸ்டர் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் விளையாட்டு தொடர்பான பட்டப்படிப்பு முடித்துள்ள நிலையில் அதற்கான பட்டமளிப்பு விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பதற்காக என கூறப்படுகிறது. ஸ்டாலின், அவரது மனைவி துர்கா ஸ்டாலின், உதயநிதி மற்றும் குடும்பத்தினரும் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் பின்னர் அவர்கள் ஜூலை 18 இல் சென்னை திரும்புவார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்த வெளிநாட்டு பயணம் அரசியல் வட்டாரங்களிலும் கவனத்தை ஈர்த்துள்ளது. எனினும், இந்தப் பயணம் குடும்ப நிகழ்வை மையமாகக் கொண்ட தனிப்பட்ட பயணமாகவே விளக்கப்படுகிறது.

# உதயசந்திரனிடமிருந்து தொல்லியல் துறை பறிப்பு... புதிய பொறுப்பில் ஜெயசீலன்!

சென்னை, ஜூலை. 11–

தமிழர்களின் வரலாற்றை உலகறியச் செய்த கீழடி, ஆதிச்சநல்லூர், தாமிரபரணி உள்ளிட்ட முக்கிய அகழாய்வு பணிகளை முன்னெடுத்த உதயசந்திரன் ஐஏஎஸிடம் இருந்து தொல்லியல் துறை மாற்றப்பட்டுள்ளது.புதிய செயலாளராக ஜெயசீலன் ஐஏஎஸ் நியமனம்.

# சுகாதார வளாகம் முழுமையாக சீரமைப்பு!

தேனி, ஜூலை. 11–

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், பொட்டிப்புரம் ஊராட்சி, சின்னப்பொட்டிப்புரத்தில் ஆண்கள் சுகாதார வளாகம் ஓராண்டுக்கும் மேலாக பயன்பாடின்றி இருப்பதாக புகார் வரப்பெற்றதைத் தொடர்ந்து,

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் உத்தரவின்பேரில், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் சார்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சுகாதார வளாகம் முழுமையாக சீரமைக்கப்பட்டு, தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது என போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் OPS: கருணை நியமன ஊழியர்களுக்கு?




புதுடெல்லி, ஜூலை. 11–

பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) எதிர்பார்த்திருந்த சில மத்திய அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சி தரும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம் (CSIR), மத்திய அரசின் உத்தரவின்படி, கருணை அடிப்படையில் பணியில் சேர்ந்த தகுதியான ஊழியர்கள் OPS–ஐ தேர்வு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

ஜனவரி 1, 2004–க்கு முன் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கு விண்ணப்பித்து, 2004–க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்கள், தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (NPS) இருந்தாலும், தற்போது OPS–ஐ தேர்வு செய்யலாம். இந்த முடிவு, ஜூன் 22, 2026 அன்று மத்திய அரசு வெளியிட்ட உத்தரவின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது. CSIR தனது அனைத்து ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களில் இந்த நடைமுறையை அமல்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து, பிற மத்திய தன்னாட்சி நிறுவனங்களும் இதே உத்தரவை செயல்படுத்தினால், அங்குள்ள தகுதியான ஊழியர்களும் பழைய ஓய்வூதியத் திட்டத்தைத் தேர்வு செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அறிவிப்பு, கருணை அடிப்படையில் பணியில் சேர்ந்த பல குடும்பங்களுக்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

# எக்செல் யூட்டிலிட்டி வெளியீடு; வரி செலுத்துவோருக்கு முக்கிய அறிவிப்பு!




புதுடெல்லி, ஜூலை. 11–

2026–27 மதிப்பீட்டு ஆண்டிற்கான ITR–7 எக்செல் யூட்டிலிட்டியை வருமான வரித்துறை வெளியிட்டுள்ளது. இந்த ஆஃப்லைன் கருவி மூலம் தகுதியுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், இணைய இணைப்பு இல்லாமலேயே வருமான வரி கணக்கைத் தயாரித்து, பின்னர் JSON கோப்பாக உருவாக்கி இ–ஃபைலிங் தளத்தில் பதிவேற்றலாம். ITR–7 படிவம் தனிநபர்களுக்கானது அல்ல. அறக்கட்டளைகள், மத நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வருமான வரிச் சட்டத்தின் 139(4A), 139(4B), 139(4C), 139(4D) பிரிவுகளின் கீழ் வரும் அமைப்புகள் இதைப் பயன்படுத்தலாம். இந்த ஆஃப்லைன் வசதி மூலம் கணக்குகளை முன்கூட்டியே தயாரித்து, கடைசி நேர நெரிசலைத் தவிர்க்க முடியும். தனிநபர் வரி செலுத்துவோருக்கான ITR தாக்கல் கடைசி தேதி ஜூலை 31, 2026 என வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

# வேலை வாய்ப்பு

## மதுரை மாவட்ட சுகாதார சங்கத்தில் 51 காலிப்பணியிடங்கள்!

மதுரை மாவட்ட சுகாதார அலுவலகம் மற்றும் மதுரை மாநகராட்சியின் கீழ் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார நலவாழ்வு மையங்களில் உள்ள 51 காலிப்பணியிடங்களைஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 2026 ஜூலை 24–ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம்.

இந்த ஆட்சேர்ப்பில் மருத்துவ அலுவலர், பணியாளர் செவிலியர், சுகாதார ஆய்வாளர், பல்நோக்கு மருத்துவமனை பணியாளர், ஆய்வக தொழில்நுட்ப நிபுணர், மருந்தாளர், ஓட்டுநர், நகர்ப்புற சுகாதார மேலாளர், பிசியோதெரபிஸ்ட் உள்ளிட்ட பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. கல்வித் தகுதி பணியிடத்தைப் பொறுத்து 8–ம் வகுப்பு முதல் எம்.பி.பி.எஸ். வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அலுவலர் பணிக்கு எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் பதிவு கட்டாயம். இந்தப் பணிக்கு மாதம் ரூ.63,000 சம்பளம் வழங்கப்படும். பணியாளர் செவிலியருக்கு ரூ.21,000, மருந்தாளருக்கு ரூ.18,000, சுகாதார ஆய்வாளர் மற்றும் ஓட்டுநருக்கு ரூ.17,500, ஆய்வக தொழில்நுட்ப நிபுணருக்கு ரூ.17,000, பல்நோக்கு மருத்துவமனை பணியாளருக்கு ரூ.11,000 மாத ஊதியம் வழங்கப்படுகிறது.

சில பணிகளுக்கு தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும் என்பது கட்டாயத் தகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. வயது வரம்பு பணியிடத்திற்கேற்ப 35 முதல் 50 வயது வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியிடங்கள் அனைத்தும் முற்றிலும் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலானவை. எனவே, பின்னர் நிரந்தரப் பணி கோர முடியாது. விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், சாதி, இருப்பிடம், அனுபவம் மற்றும் தேவையான சிறப்புத் தகுதிச் சான்றிதழ்களின் சுயசான்றொப்ப நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ மாவட்ட சுகாதார அலுவலர் / நிர்வாக செயலர், மாவட்ட நலவாழ்வுச் சங்கம், மாவட்ட சுகாதார அலுவலகம், விஸ்வநாதபுரம், மதுரை 625014 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: 0452–2640778 என்ற தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை மதுரை மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

# பழனி மட நிலம்... தனியாருக்கு பதிவு? கோவில் நிர்வாகம் விளக்கம்!




பழனி ஜூலை 11–

பழனி அடிவாரம் பூங்கா ரோடு பகுதியில் தண்டபாணி சுவாமி மடத்துக்கு சொந்த மான, சுமார் ஒரு ஏக்கர் 40 சென்ட் நிலம் உள்ளது. ஆக்கிரமிப்பில் இருந்த நிலத்தை பழனி கோவில் நிர்வாகம் மீட்டு கையகப்படு த்தியது. தற்பொழுது இலவச வாகன நிறுத்தும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நிலத்தை நிர்வாகம் செய்ய பழனி கோவில் இணை ஆணையர் தக்காராக கோர்ட் மூலம் நியமிக்க ப்பட்டார். இந்நிலையில் அந்த நிலத்தை பழனி சார் பதிவாளர் அலுவலகத்தில், தனிநபருக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. எனவே அந்த பதிவை ரத்து செய்ய வேண்டும் என்றும், தனியார் பத்திரபதிவு செய்ய விண்ணபித்துள்ள விண்ணப்பங்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், பழனி கோவில் நிர்வாகம் பதிவுத்துறைக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. இந்த தகவலை கோவில் நிர்வாகம் கூறியுள்ளது



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# அமர்நாத் பனிலிங்கம் 90% உருகியது... பருவநிலை மாற்றத்தின் தாக்கம்!




அமர்நாத், ஜூலை. 11–

ஜம்மு–காஷ்மீரில் உள்ள அமர்நாத் குகைக் கோயிலின் இயற்கை பனிலிங்கம் சுமார் 90% வரை உருகியுள்ளது. இதற்கு பருவநிலை மாற்றம் மற்றும் வெப்பநிலை உயர்வே முக்கிய காரணம் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

**முக்கிய அம்சங்கள்:**

மே மாதத்தில் 7 அடி உயரமாக இருந்த பனிலிங்கம் தற்போது 90% உருகியுள்ளது.

பருவநிலை மாற்றம், அதிக வெப்பநிலை, குறைந்த நீர்த்துளிகள் முக்கிய காரணங்கள்.

ஒரு வாரத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

மரவெட்டும், சுற்றுச்சூழல் பாதிப்பும் பனிலிங்கம் வேகமாக உருக காரணம் என நிபுணர்கள் எச்சரிக்கை.

# ராமேசுவரத்தில் உலகத் தர ஒலிம்பிக் நீர் விளையாட்டு மையம்... திறப்புக்கு தயார்!



ராமேசுவரம், ஜூலை. 11–

ராமேசுவரம் அருகே பிரப்பன்வலசையில் ரூ.42.90 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் நீர் விளையாட்டு மையம் திறப்பு விழாவுக்கு தயாராகியுள்ளது.

**முக்கிய அம்சங்கள்:**

ரூ.42.90 கோடி மதிப்பில் 7 ஏக்கரில் அமைப்பு.

ஹாஸ்டல், ஜிம், யோகா அறை, வாட்டர் ஸ்போர்ட்ஸ் சென்டர், படகு நிறுத்துமிடம் உள்ளிட்ட உலகத் தர வசதிகள். செயிலிங், கேனோயிங், சர்ஃபிங், கயாக்கிங், ஸ்டாண்ட்–அப் பேடில் விளையாட்டுகளுக்கு பயிற்சி வழங்கப்படும்.

தேசிய, சர்வதேச போட்டிகள் நடத்தவும், வெளிநாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும் திட்டம்.

விரைவில் முதல்வர் விஜய் திறந்து வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அனைத்தும் டிஜிட்டல் மயம்: இனி பொதுமக்கள் எளிதாக வீடு வாங்கலாம்...!



சென்னை, ஜூலை. 11–

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து சொத்து விற்பனை மற்றும் சேவைகளையும் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் வீடு, மனை மற்றும் வணிக வளாகங்களை வாங்க பொதுமக்கள் இனி அலுவலகங்களுக்கு அலைந்து திரியாமல், ஆன்லைன் மூலம் எளிதாக விண்ணப்பித்து வாங்கும் வசதி ஏற்பட உள்ளது.

தமிழகத்தில் அனைவருக்கும் வீடு என்ற இலக்குடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அந்த இலக்கை இன்னும் அடைய முடியவில்லை. வீடுகள் மற்றும் மனைகள் விற்பனை தொடர்பாக பொதுமக்கள் நேரில் சென்று தகவல் பெறுதல், விண்ணப்பித்தல், ஆவணங்களை சமர்ப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு நடைமுறைகள் இருந்தன. இதனால் காலதாமதம் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்த கேள்விகளும் அவ்வப்போது எழுந்தன.

இதையடுத்து, வாரியத்தின் அனைத்து சேவைகளையும் டிஜிட்டல் மயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கடந்த மாதம் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் பி.ராஜ்குமார், வாரியத்தின் அனைத்து சேவைகள், எதிர்கால வீட்டுத் திட்டங்கள் மற்றும் சொத்து விற்பனை நடவடிக்கைகள் அனைத்தும் ஆன்லைன் தளத்திற்கு மாற்றப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதன்படி தற்போது இந்த பணிகள் மூழு வீச்சில் நடந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பே, வீட்டு வசதி வாரியத்தில் டிஜிட்டல் நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டன. ஆனால் அவை முழுமை பெறவில்லை. தற்போது ஆன்லைன் போர்டல் தயாராக உள்ளது. வீடுகள், மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் தொடர்பான விவரங்களை பதிவேற்றும் பணி மிக வேகமாக நடைபெற்று வருகிறது. தற்போது சுமார் 60 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. மொத்தம் சுமார் 10 ஆயிரம் குடியிருப்பு மற்றும் வணிக சொத்துகள் இணையதளத்தில் இடம்பெற உள்ளன. இதில் சுமார் 4 ஆயிரம் சொத்துகளின் விவரங்களை பதிவேற்றும் பணி இன்னும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணிகள் அடுத்த 15 நாட்களுக்குள் நிறைவடையும்.

டிஜிட்டல் மயமாக்கல் நிறைவடைந்த பிறகு, விற்பனையாகாமல் உள்ள வீடுகள், மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் பொதுமக்கள் பார்வைக்காக இணையதளத்தில் வெளியிடப்படும். சொத்தின் இருப்பிடம், விலை, பரப்பளவு, காலியிடங்கள் உள்ளிட்ட விவரங்களை மக்கள் நேரடியாக அறிந்து கொள்ள முடியும்.

மேலும், புதிய வீட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்படும்போது, விண்ணப்பம் பெறுதல் முதல் ஒதுக்கீடு மற்றும் விற்பனை வரை பெரும்பாலான நடைமுறைகள் ஆன்லைன் வழியில் மேற்கொள்ளப்பட உள்ளன. இதனால் இடைத்தரகர்களின் தலையீடு குறைவதுடன், செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது முழுமையான டிஜிட்டல் நடைமுறைக்கு மாறுவதன் மூலம் மனித தலையீட்டை குறைத்து, பொதுமக்கள் எளிதாகவும் வெளிப்படையாகவும் வீடுகளை வாங்கும் சூழல் உருவாக்கப்பட உள்ளது.

# கட்சி நிகழ்ச்சிகளை அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு காண்பிக்க கூடாது!



சென்னை, ஜூலை. 11–

த.வெ.க. நிகழ்ச்சியை பள்ளிக்கூடத்தில் நேரலை செய்து மாணவர்களுக்கு திரையிட்ட சம்பவம் தவறு என்றும், கட்சி நிகழ்ச்சிகளை அரசு பள்ளிகளில் மாணவர்களுக்கு காண்பிக்க கூடாது என்றும் அமைச்சர் ராஜ்மோகன் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கரூரில் முதல்–அமைச்சர் விஜய் கலந்துகொண்ட கட்சி சார்ந்த நிகழ்ச்சி பள்ளி ஒன்றின் வகுப்பறையில் ‘ஸ்மார்ட்’ போர்டு வாயிலாக ஒளிபரப்பப்பட்டது சமூக வலைதளங்களில் பேசு பொருளானது. இந்த விவகாரத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

பள்ளிக்கல்வித் துறை உத்தரவை மீறி, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பள்ளியில் த.வெ.க. நிகழ்ச்சியை நேரலை செய்து மாணவர்களுக்கு திரையிட்டது தவறு. சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு, அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். எந்தவொரு கட்சியின் நிகழ்ச்சியையும் அரசு பள்ளி வளாகங்களில் மாணவர்களுக்கு காட்டக்கூடாது.

இதுதொடர்பாக பள்ளி கல்வி, தொடக்க கல்வி, தனியார் பள்ளிகள் ஆகிய 3 துறைகளின் இயக்குனர்கள் கூட்டாக அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு நேற்று அனுப்பிய சுற்றறிக்கையில், பள்ளிகளில் சாதி. மத. அரசியல் சார்ந்த நிகழ்வுகளைத் முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், முதல்வர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர்.

# செந்தில்பாலாஜிக்கு எதிரான தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்தது ஐகோர்ட்!



சென்னை, ஜூலை. 11–

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, தி.மு.க.. சார்பில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றார். இவர், த.வெ.க.. வேட்பாளர் வி.செந்தில்குமாரை விட 2 ஆயிரத்து 271 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற்றுள்ளார். இவரது வெற்றியை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த கே.பிரகாசம் என்பவர் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், “செந்தில்பாலாஜி தன்னுடைய சொத்துக் கள், குற்ற வழக்குகள் ஆகியவை குறித்து முழுமையாக வேட்புமனுவில் குறிப்பிடவில்லை.

பல தகவல்களை மறைத்துள்ளார். அவரது வெற்றியை செல்லாது என்று அறிவிக்கவேண்டும்” என்று கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, “மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 81–வது பிரிவின்படி, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சேர்ந்த மனுதாரர் பிரகா சம், கோவை தெற்கு தொகுதியின் வேட்பாளரும் அல்ல. அந்த தொகுதி வாக்காளரும் அல்ல. எனவே, அவர் தாக்கல் செய்துள்ள இந்த தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்கிறேன்” என்று உத்தரவிட்டுள்ளார்.

# மாநிலப் பாடல் முதலில்... உத்தரவு!



புதுடெல்லி, ஜூலை. 11–

அரசு விழாக்களில் மாநிலப் பாடலே முதலில் பாடப்பட வேண்டும் என உத்தரவிட்டு மத்திய உள்துறை அமைச்சகம் புதிய வழிகாட்டுதல் வெளியிட்டுள்ளது.

இதன்படி முதலில் மாநிலப் பாடல், அதைத் தொடர்ந்து தேசியப் பாடல் (வந்தே மாதரம்), இறுதியாக தேசிய கீதமும் (ஜன கண மன) பாடப்பட வேண்டும். தேசியப் பாடல், தேசிய கீதத்தை பாடும்போது அதன் அசல் வரிகள், சரியான உச்சரிப்பு முறைகளை துல்லியமாகப் பின்பற்ற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்து மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களுக்குப் புதிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ள மத்திய உள்துறை அமைச்சகம், இந்த வரிசைமுறையைத் தவறாமல் பின்பற்றுமாறு மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

தேசிய கீதம் அல்லது தேசியப் பாடல் கட்டாயம் இசைக்கப்பட அல்லது பாடப்பட வேண்டிய நிகழ்வுகள் மற்றும் அவை இசைக்கப்பட அல்லது பாடப்படக்கூடிய (விருப்பத்திற்குரிய) நிகழ்வுகள் குறித்த விரிவான பட்டியலை தனது உத்தரவுகள் உள்ளடக்கியுள்ளதாக உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதிசெய்யும் வகையில், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு தகுந்த அறிவுறுத்தல்களை வழங்குமாறு அனைத்து மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களை உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# போயஸ் கார்டனில் முதல்வர் விஜய்?



சென்னை, ஜூலை. 11–

தமிழக முதலமைச்சர் விஜய், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வசித்து வந்த சென்னை போயஸ் கார்டனில் உள்ள ‘வேதா இல்லத்தை’ வாங்க திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக, வீட்டின் தற்போதைய உரிமையாளரும் ஜெயலலிதாவின் அண்ணன் மகளுமான தீபாவுடன் சுமார் ரூ.350 கோடிக்கு பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து அரசு அல்லது முதலமைச்சர் தரப்பில் எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாக வில்லை. தற்போது முதலமைச்சர் விஜய், நீலாங்கரையில் உள்ள தனது இல்லத்தில் இருந்து தினமும் தலைமைச் செயலகத்திற்கு சென்று வருகிறார். இதனால், கிழக்குக் கடற்கரைச் சாலையில் (ECR) போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பொதுமக்களும் சிரமம் அடைவதாக தொடர்ந்து விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்திற்கு அருகிலுள்ள பகுதியில் குடியேறுவது குறித்து பல்வேறு ஆலோசனைகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, போயஸ் கார்டனில் உள்ள வேதா இல்லத்தை வாங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் நிறைவேறினால், முதலமைச்சரின் தினசரி பயண நேரம் குறைவதுடன், போக்குவரத்து நெரிசல் மற்றும் பாதுகாப்பு காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போயஸ் கார்டன் ஏற்கனவே ரஜினிகாந்த், சசிகலா, தனுஷ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் வசிக்கும் VVIP பகுதியாகும். எனவே, முதல்வர் விஜய் அங்கு குடியேறினால் அது அரசியல் மற்றும் சமூக வட்டாரங்களில் கூடுதல் கவனத்தை ஈர்க்கும் எனக் கூறப்படுகிறது. இருப்பினும், இந்த தகவல்கள் தற்போது அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2035-ம் ஆண்டுக்குள் இந்தியா, விண்வெளி நிலையத்தை அமைக்கும்- ‘இஸ்ரோ’ தலைவர் நாராயணன்!



புதுடெல்லி, ஜூலை. 11–

பெங்களூருவில் இந்திய அறிவியல் கழகம் உள்ளது. அங்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக இஸ்ரோ தலைவர் நாராயணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் அவர் பேசியதாவது:– 2047–ம் ஆண்டு இந்தியா வளர்ந்த நாடாக மாற பிரதமர் மோடிக்கு ஒரு தெளிவான தொலை நோக்கு பார்வை உள்ளது. நமது நாடு 100–வது சுதந்திர தின விழா கொண்டாடுவதற்கு முன்பு நமது வல்லரசு நாடாக உருவாகும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

நமது நாடு சுதந்திரம் அடைந்தபோது வறுமையில் இருந்தது. படிப்படியாக நாம் வளர்ந்து இன்று உலகின் 4–வது பெரிய பொருளாதார பல மிக்க நாடாக மாறியுள்ளது. சுகாதாரம், விவசாயம், மின்சாரமயம், அறிவியல் துறைகளில் நாம் பெரிய அளவுக்கு வளர்ந்துள்ளோம். நீங்கள் தொடர்ந்து படித்துக் கொண்டே இருங்கள். அறிவியல், பொறியியலில் ஆய்வு செய்யுங்கள்.நீங்கள் கடுமையாக உழைத்து நேர்மை, குழுவாக பணியாற்றுதல், தன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். கல்வியில் வளர இந்த தகுதிகள் அவசியம். இஸ்ரோவில் நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றுவதால்தான் வெற்றியை பெறுகிறோம். நாங்கள் இதுவரை 105 ராக்கெட்டுகள், 135 செயற்கைக்கோள்களை தயாரித்து விண்ணில் ஏவியுள்ளோம்.

நிலவின் கோளப்பாதையில் இந்தியாவுக்கு ஒரு நல்ல கேமரா உள்ளது. அதனால் நிலவின் சிறந்த புகைப்படங்கள் இந்தியாவுக்கு கிடைக்கிறது. சந்திரயான்–3 திட்டம் மூலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய ஒரே நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு உள்ளது. நாம் சுதந்திரம் அடைந்து 15 ஆண்டுகளுக்கு பிறகே விண்வெளி திட்டத்தை தொடங்கி னோம். இந்தியா முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரக கோளப்பாதையில் விண்கலத்தை நிலை நிறுத்தினோம். வேறு எந்த நாடும் இதை சாதிக்க வில்லை. வருகிற 2035–ம் ஆண்டுக்குள் இந்தியா தனது சொந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க உள்ளது. 2040–ம் ஆண்டுக்குள் இந்தியர்கள் விண்ணில் இறங்குவார்கள். நாங்கள் தொடர்ந்து ககன்யான் திட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

# கோயம்பேடு பழைய பஸ் நிலையம்... புதிய தலைமைச் செயலகமா?



சென்னை, ஜூலை 11–

வெளியாகியுள்ள தகவல்களின்படி, கோயம்பேடு பழைய புறநகர் பேருந்து நிலைய வளாகத்தை புதிய தலைமைச் செயலகமாக மாற்றுவது குறித்து ஆரம்பகட்ட ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன என்ற தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அரசு இதுகுறித்து இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடவில்லை. அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாக வாய்ப்புள்ளதாக தகவல்.

**முக்கிய அம்சங்கள்:**

கோயம்பேடு பழைய பேருந்துநிலைய வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் யோசனை குறித்து அரசு மட்டத்தில் ஆலோசனை நடைபெறுவதாக தகவல்.

தற்போதைய தலைமைச் செயலகத்தில் இடநெருக்கடி, வாகன நிறுத்த வசதி பற்றாக்குறை மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகியவை முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

கோயம்பேட்டில் மெட்ரோ, சாலை மற்றும் பேருந்து இணைப்பு சிறப்பாக இருப்பதால் நிர்வாக வசதி அதிகரிக்கும் என அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

முதலமைச்சரின் ஒப்புதல் கிடைத்தால், எதிர்கால பட்ஜெட்டில்




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020